செ. கு. எண்: 225 நாள்: 06.12.2018

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி

## அவர்களின் இரங்கல் செய்தி – 6.12.2018

---

நமது பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாக்கும் அரும்பணியை ஆற்றிய திரு. 'நெல்' ஜெயராமன் அவர்கள் இன்று (6.12.2018) காலை உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், கட்டிமேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜெயராமன் அவர்கள் "நமது நெல்லை காப்போம்" என்ற இயக்கத்தின் மூலம் பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாத்து தமிழ்நாடு விவசாயிகளிடையே பிரபலப்படுத்தி, விவசாயிகள் அதனை பயிரிட்டு பயன்பெறும் வகையில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டவர். இவர் மாப்பிள்ளை சம்பா, ராஜமன்னார், கவுனி, மிளகுசம்பா, குண்டு கார், போன்ற 174 பாரம்பரிய நெல் ரகங்களை மீட்டெடுத்து, விவசாயிகளிடையே பிரபலபடுத்தி உள்ளார்.

திரு. ஜெயராமன் அவர்கள் இதுவரை சுமார் ஆயிரக்கணக்கான வேளாண் பெருமக்களை பாரம்பரிய நெல் விவசாயத்தில் ஈடுபடுத்தி, தமிழ்நாட்டில் பாரம்பரிய நெல் உற்பத்தியினை உயர்த்திய பெருமைக்குரியவர்.

பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாப்பதில் திரு. நெல் ஜெயராமன் அவர்கள் ஆற்றிய சிறப்பான சேவையினை, தமிழ்நாடு அரசு அங்கீகரித்து பாராட்டும் விதமாக 5 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிட 14.11.2018 அன்று நான் உத்தரவிட்டேன். எனது உத்தரவின் பேரில், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. ஆர். காமராஜ் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு ஆகியோர் 5 லட்சம் ரூபாய் நிதியினை வழங்கினார்கள்.

விவசாயிகளிடையே பாரம்பரிய நெல் ரகங்களை பிரபலப்படுத்தி, அதன் உற்பத்தியை ஊக்கப்படுத்திய திரு.ஜெயராமன் அவர்களின் மறைவு தமிழ் நாட்டிற்கும், வேளாண்மைத் துறைக்கும் ஒரு பேரிழப்பாகும்.

திரு. ஜெயராமன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், வேளாண் பெருங்குடி மக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**